Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20171027T

## 1985ம் ஆண்டின் பின் முதலாவது அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் யு.எஸ்.எஸ் நிமிட்ஸ் இலங்கைக்கு விஜயம்

***கொழும்பு, ஒக்டோபர் 27*** – எதிர்வரும் ஒக்டோபர் 28ம் திகதி திட்டமிடப்பட்ட துறைமுக விஜயமாக, நிமிட்ஸ் தாக்குதல் கப்பற் படையணி கொழும்பு வரவுள்ளது. இத்தாக்குதல் கப்பற் படையணியில் யு.எஸ்.எஸ் நிமிட்ஸ், வேக யுத்தக் கப்பலான யு.எஸ்.எஸ் பிரின்ஸ்டன், நாசகாரிக் கப்பல்களான யு.எஸ்.எஸ் ஹவார்ட், யு.எஸ்.எஸ் ஷுப், யு.எஸ்.எஸ் பிங்க்னே, மற்றும் யு.எஸ்.எஸ் கிட் ஆகியன இடம்பெறும். இக் கப்பல்கள், 2017 ஒக்டோபர் 31ம் திகதி கொழும்பிலிருந்து புறப்படத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இலங்கை மற்றும் அமெரிக்க கடற்படையினருக்கு இடையில் மேம்பட்டு வரும் நல்லுறவின் பிரதிபலிப்பாக, கடந்த 1985ம் ஆண்டின் பின் முதன்முறையாக விமானந்தாங்கிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது. அண்மையில் நிறைவடைந்த மிதக்கும் தயார்நிலை மற்றும் பயிற்சிக்கான கூட்டுறவு (CARAT) என்ற இருதரப்பு கடற்படை ஆரம்பப் பயிற்சிகளைத் தொடர்ந்து இவ்விஜயம் அமையவுள்ளது.

*''இலங்கையின் சுயமான நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகள் முன்னேறும் இக்கட்டத்தில், எமது கடல்சார்ந்த நல்லுறவைக் கட்டியெழுப்புவது மூலம் இரு நாடுகளுக்கும் பொதுவான குறிக்கோள்களான பாதுகாப்பு மற்றும் ஸ்தீரத்தன்மை ஆகியன மேம்படும்''* என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷப் குறிப்பிட்டார். *''இலங்கைக்கு வர அமெரிக்க கடற்படையினருக்கு வாய்ப்புக் கிடைத்தமை பற்றி நான் மகிழ்ச்சி அடைவதுடன், அற்புதமான மக்களைச் சந்திக்கவும், பாடசாலை, வைத்தியசாலை, ஓய்வு இல்லங்களில் நடைபெறும் பொதுப்பணிகளில் ஈடுபடுவது மூலம், சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும்''* எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் விமானந்தாங்கி தாக்குதல் படையணியின் விஜயத்தின் போது, விநியோகப் பண்டங்கள் கொள்வனவு மற்றும் ஆயிரக்கணக்கான அமெரிக்கப்படையினர் உள்ளூர் வியாபாரிகளுக்கு உதவுவது மூலம், இலங்கை வர்த்தகத்தில் ஏறத்தாள 1.54 பில்லியன் ரூபாக்கள் (10 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வரவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின் போது அமெரிக்கப் படையினர் உள்ளூர் சமூகத்தைத் தெரிந்து கொள்வதுடன், இலங்கைக் கடற்படையினரையும் சந்திப்பர். துறைமுகத்தில் தரித்து நிற்கும் வேளையில் அமெரிக்கக் கடற்படையினர் உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து வைத்தியசாலை, அனாதை இல்லங்கள், மற்றும் பல இடங்களில் சமூக சேவைப் பணிகளில் உதவி செய்வர்.

*''கொழும்பில் பெற்றக்கொள்ளவுள்ள அனுபவத்தை எதிர்நோக்கி எமது குழுவினர் ஆர்வமாக உள்ளனர்''* என தாக்குதல் படையணி 11இன் கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் கிறகறி ஹரிஸ் அவர்கள் குறிப்பிட்டார். *''எமது படையினரில் சிலர் மட்டுமே முன்னர் இலங்கைக்கு வந்துள்ளதால் ஒரு சாகச மற்றும் எதிர்பார்ப்பு உணர்வு மேலோங்கி உள்ளது. எமது விஜயம் மூலம் இலங்கையுடனான கலாச்சார மற்றும் ஏனைய பரிமாற்றங்கள் மேம்படுவதுடன், நாம் புறப்பட்ட பின்பும் இவ்வுறவுகள் நீடித்து நிலைக்கும் என நம்புகிறேன்''* எனத் தெரிவித்தார்.

யு.எஸ்.எஸ் நிமிட்ஸ் விமாந்தாங்கிக் கப்பல் அடியில் இருந்து பாய்மர நுனிவரை 23 மாடிக்கட்டட

உயரமுடையதுடன் 333 மீற்றர் நீளமானது. இக்கப்பலில் 5,000 பேருக்கு மேல் பயணிக்க முடிவதுடன், கப்பல் சமையலறைகளில் ஒரு நாளில் 18,000 பேருக்கான உணவு சமைக்க முடியும். ஒரு நாளில் 1.5 மில்லியன் நன்னீரை உற்பத்தி செய்வதுடன், ஒரு வாரத்தில் 1,500 பேருக்கு முடிதிருத்தம் செய்யக்கூடிய இரு முடி திருத்தகங்களும் உள்ளன. யு.எஸ்.எஸ் நிமிட்ஸின் தாய்த் துறைமுகம் வாஷிங்டன் மாநிலத்தில் அமைந்துள்ளது.